# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்குமாகாணம்
# Provincial Department of Education – Northern Province

## இரண்டாம் தவணைப்பரீட்சை 2023

| தரம் : 11 | தொடர்பாடலும் ஊடகக்கல்வியும் I<br>Communication and Media Studies I | நேரம் :<br>1 மணித்தியாலம் |
|---|---|---|
| சுட்டெண்:.............................. | 87 T I | மேலதிக வாசிப்பு நேரம்<br>10 நிமிடம் |

**கவனிக்க:**

- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4), என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
- உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவிற்கும் உரிய கட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.

01. இலங்கையின் முதன் முதலான பிராந்திய ஒலிபரப்புச் சேவை
    1) லுஹுணு 2) மகாநுவர 3) இராஜரட்டை 4) வயம்ப

02. சுடர் ஒரு வானொலி அறிவிப்பாளர். அவரது தொழிலுடன் மிகத் தொடர்புடைய தொடர்பாடல் வடிவம்
    1) முறைசார் தொடர்பாடல் வடிவம் 2) வெகுசனத் தொடர்பாடல் வடிவம்
    3) செவிப்புலத் தொடர்பாடல் வடிவம் 4) வாய்மொழித் தொடர்பாடல் வடிவம்

03. கூச்சலிடுதல் பற்றிய தவறான விளக்கம் எது?
    1) அது பல்வேறு அர்த்தங்களினை உடையது. 2) அது குறியீட்டுத் தன்மையானது.
    3) அது வாய்மொழித் தொடர்பாடல் ஆகும். 4) அது எல்லைகள் கடந்ததாகும்.

04. எவ்வகையான செய்தி தலைகீழ் பிரமிட் வடிவத்தில் அறிக்கையிட மிகப் பொருத்தமானது?
    1) வன்செய்தி 2) மென்செய்தி
    3) உணர்வுபூர்வமான செய்தி 4) தற்போது கிடைத்த செய்தி (Breaking News)

05. 20ஆம் நூற்றாண்டின் ஆரம்ப கட்டத்தில் இலங்கையில் பத்திரிகை ஆசிரியரொருவரே அதன் உரிமையாளர் ஆகவும் அமைந்திருந்த செய்திப் பத்திரிகை
    1) லக்மின் பஹன 2) ஞானார்ந்த பிரதிபாய 3) சிங்கள பௌத்தய 4) தினமின

06. “ஒரு நாய் மனிதனைக் கடிக்கும் போது அது செய்தி அல்ல. ஆனால் ஒரு மனிதன் நாயைக் கடிக்கும் போது அது செய்தியாகும்” இது முன்வைக்கப்பட்டது.
    1) போல்.D.மெசுனியரினால் ஆகும். 2) மில்டன் பிரஷ்ஷினால் ஆகும்.
    3) சாள்ஸ் அன்டர்ஸன் டானாவினால் ஆகும். 4) கப்ரியல் ஸ்கேத்தினால் ஆகும்.

07. இலங்கையில் எழுத்து அச்சுப்பதிப்பு (Letter press Printing) முறையைப் பயன்படுத்தி அச்சிடப்பட்ட முதலாவது புத்தகம் எது?
    1) இலத்தீன் இலக்கணம். (Latin Grammer)
    2) இலத்தீன் பைபிள் (Latin Bible)
    3) லன்தேசி அல்லது டச்சு ஆராதனைப் புத்தகம் (Dutch Prayer Book)
    4) கொழும்பு ஜேர்னல் (Colombo Journal)

08. ஆரம்பகால செய்திப் பத்திரிகையில் பிரதான கட்டுரைகளைப் பதிப்பில் சேர்த்த பின்னர், இருக்கும் வெற்றிடங்களை நிரப்புவதற்குப் பயன்படுத்தப்பட்டவை

1) கேலிச் சித்திரங்கள் ஆகும்..
2) சிறப்புக் கட்டுரைகள் அல்லது பந்திகள் ஆகும்.
3) விடயக் கட்டுரைகள் அல்லது சித்திரிப்புக் கட்டுரைகள் ஆகும்.
4) புகைப்படக் கட்டுரைகள் ஆகும்.

09. லாஸ்வெல்லின் வரைவிலக்கணத்தின்படி, தொடர்பாடலின் முக்கிய உறுப்புக்களாவன,

1) தொடர்பாடல் செய்பவர், செய்தி ஊடகம், பெறுநர் மற்றும் தாக்கம்.
2) தொடர்பாடல் செய்பவர், செய்தி, ஊடகம், பெறுநர் மற்றும் பின்னூட்டம்
3) செய்தி, ஊடு கடத்துதல், பெறுநர், சேருமிடம் மற்றும் அனுபவக்களம்
4) தொடர்பாடல் செய்பவர், செய்தி, இரைச்சல், பெறுநர் மற்றும் சேருமிடம்.

10. மொழியின் இரட்டைத்தன்மை எண்ணக்கரு தொடர்புபடுவது

1) பேச்சு மற்றும் எழுத்துடன்
2) உரை மற்றும் அளிக்கையுடன்
3) செவிமடுத்தல் மற்றும் உச்சரிப்புடன்
4) வாய்மொழிசார் மற்றும் வாய்மொழி சாராத் தொடர்பாடலுடன்

11. ஒரு குறிப்பிட்ட தகவலானது உயர்நிலை அங்கீகாரத்தைப் பெறுவதற்கு அவசியம் உள்வாங்கப்பட வேண்டிய அம்சங்களாவன

1) துல்லியம், நடுநிலை, தெளிவு மற்றும் படைப்பாக்கம்
2) துல்லியம், நடுநிலை,, ஊடகத்தன்மை மற்றும் தொடர்புபடுதல்.
3) துல்லியம், நடுநிலை, தெளிவு மற்றும் நம்பகத்தன்மை
4) தொடர்புபடுதல், அண்மித்ததன்மை, காலத்தோடு இயைந்திருத்தல், முக்கியத்துவம்

12. புலக்காட்சி தடைப்படுவது, செய்தியானது

1) பெறுநர்மையத் தகவல்களை கொண்டிருப்பதால் ஆகும்.
2) தனியே ஒரேயொரு அர்த்தத்தைக் கொண்டிருப்பதால் ஆகும்.
3) வெகுசன ஊடகங்கள் வழியாக மாத்திரம் முன்வைக்கப்படும் தகவல்களைக் கொண்டிருப்பதால் ஆகும்.
4) அனுபவக் களத்துடன் பொருந்தியிராத தகவல்களைக் கொண்டிருப்பதால் ஆகும்.

13. புகைப்படமெடுத்தலின் படைப்பாக்கத்திற்காகப் படச் சட்டகமொன்றில் பொருட்கள் பொருத்தமாக அமைப்பொழுங்கு செய்யப்படுவது

1) உருவகப்படுத்தல் அல்லது ஒருங்கிசைதல் (Composition) ஆகும்.
2) குவியப்படுத்தல் (Focusing) ஆகும்.
3) ஒளி அசைவு (exposure) ஆகும்.
4) காட்சிப்புல ஆழம் (depth of field) ஆகும்.

14. நேரடி அறிக்கையிடல் என்பது

1) உடனடியாக நிகழ்வொன்றை அறிக்கையிடுதல்
2) புலனாய்வு வழியில் அறிக்கையிடுதல்
3) நிகழ்பவற்றை அவ்வாறே அறிக்கையிடுதல்
4) சம்பந்தப்பட்ட தரப்பினர் ஊடாக அறிக்கையிடுதல்.

15. இலங்கையில் வானொலி ஒலிபரப்புத் தொடர்பில் சரியான கூற்றைத் தெரிவு செய்க.

1) ஸ்தாபகர் ஜோரஜ் தொம்சன் ஆவார்.
2) தென்னாசியாவில் முதல் வானொலிச் சேவை
3) பிரிட்டிஷாரால் முன்னெடுக்கப்பட்ட முதல் வானொலிச் சேவை
4) சேர்..ஹியூ கிளிபோர்ட் முதலாவது பணிப்பாளர் ஆவார்.

16. புகைப்படமெடுத்தலில் படலவேகம் (Flim speed) அளவிடப்பட உதவுவது

1) ISO பெறுமதி ஆகும். 2) பிக்ஸல் (pixel ) அளவு ஆகும்.

3) குவியத்தூரம் (F) பெறுமதி ஆகும். 4) பைட் (Byte) அளவு ஆகும்.

17. செய்தி புகைப்படமொன்றில் முக்கிய பண்புகளாவன,

1) காலத்திற்கேற்றதாயிருத்தல், மானுடவிருப்பு மற்றும் தனிப்பட்டநிலை நோக்கு

2) அசாதாரணத்தன்மை, முரண்பாடு, பல்வகைமை

3) காலத்திற்கேற்றதாயிருத்தல், பாதிப்பு, தனிப்பட்டநிலை நோக்கு

4) வெளிப்படைத்தன்மை, அண்மித்த தன்மை, புதுமை

18. அலுவலக பணிக்கு சட்டபூர்வ தன்மையை வழங்கும் கருவிகளாவன

1) கணிப்பானும் நாணய கணக்கிட்டு இயந்திரமும் ஆகும்.

2) பதவி முத்திரைக் கருவியும் திகதி முத்திரைக் கருவியும் ஆகும்.

3) தபால் முத்திரையிடல் இயந்திரமும் கணிப்பானும் ஆகும்.

4) நாணய கணக்கீட்டு இயந்திரமும் தபால்முத்திரையிடல் இயந்திரமும் ஆகும்.

19. தொலைக்காட்சி மெய்மை நிகழ்ச்சி (Reality TV programmes) தொடர்பிலான மிகச் சரியான பண்பாக அமைவது

1) தீர்ப்புகளை வழங்குவதில் மக்களிடையே பிரபலமானவர்கள் இணைந்திருப்பது

2) எழுத்துரு எதுவும் தயாரிக்கப்படாததும், தயாரிப்புக்குப் பின்னரான படத்தொகுப்பு இடம் பெறாதிருப்பதும்

3) விசேட ஒலி, ஒளிக் கலையகத்தில் பதிவுகள் இடம்பெறுவது

4) வெற்றிபெறுவோருக்கு பெறுமதியான பரிசுகள் வழங்கப்படுவது

20. செய்திப் பத்திரிகைகள் பற்றிய மிகச் சரியான கூற்றைத் தெரிவு செய்க.

1) பிரதான வருமானம் செய்திப் பத்திரிகை விற்பனையில் தங்கியிருக்கிறது.

2) விளம்பரங்களுக்கான இடம் ஒதுக்கப்பட்டதற்குப் பின்னரே செய்திகளுக்கும் கட்டுரைகளுக்குமான இடம் தீர்மானிக்கப்படுகின்றது.

3) ஆசிரியர் பீடத்திற்கும் விளம்பர பிரிவிற்கும் இடையே நேரடி தொடர்பு இருப்பதில்லை.

4) விளம்பரத்திற்கான கட்டணம் அதன் அளவில் தங்கியுள்ளது.

21. பின்வரும் அம்சங்களில் கவனம் செலுத்துக.

- அறிவிப்பாளர் நிகழ்ச்சியை நடாத்திச் செல்வார்.
- வெவ்வேறு அபிப்பிராயங்கள் முன்வைக்கப்படும்.
- ஒரு சிலரிடையே சிந்தனைகள் பரிமாறப்படும்.

மேற்படி அம்சங்களை உள்ளடக்கிய வானொலி நிகழ்ச்சி வடிவம்

1) நேர்காணல் ஆகும். 2) கலந்துரையாடல் ஆகும்.

3) உரையாடல் ஆகும். 4) நேரலை வர்ணனை ஆகும்.

22. செய்திப் பத்திரிகையில் உள்ளடக்கப்பட வேண்டிய தேவையுள்ள ஒரு அனர்த்தம் பற்றிய தகவல், அச்செய்திப் பத்திரிகை அச்சுப்பதித்தலுக்குச் செல்லச் சற்றுமுன்னர் கிடைக்கப்பெற்றது. இந்தச் சந்தர்ப்பத்தில், ஆகக் குறைந்தளவில் பாதிக்கப்படுவது,

1) விடயக் கட்டுரைகள் அல்லது சித்திரிப்புக் கட்டுரைகள் 2) செய்திகள்

3) பத்திகள் (Coloumns) 4) விளம்பரங்கள்

23. பின்வருவன வானனொலி ஊடகம் பற்றிய சில கூற்றுக்களாகும்.

A. அது உடனடி வெளிப்பாட்டுக்கான ஊடகமாகும்.

B. அது வாய்மொழித் தொடர்பாடலை மாத்திரம் பயன்படுத்தும் ஊடகமாகும்.

C. அது ஒலியை அடிப்படையாகக் கொண்ட ஊடகம் ஆகும்.

மேற்படி தரப்பட்டவற்றில் மிகச் சரியான கூற்றுக்களாவன,

1) A மற்றும் B மாத்திரம் 2) A மற்றும் C மாத்திரம்

3) B மற்றும் C மாத்திரம் 4) A, B, C அனைத்தும்

24. ஒரு உருவத்தைப் புள்ளிகளாக (Dots) பரிமாற்றம் செய்து மீண்டும் அதனை முழு உருவமாகத் திரையில் மீளமைத்துக் கொள்ளப் பயன்படும் தொழில்நுட்பம் தொலைக்காட்சித் துறையின் முக்கியமான வளர்ச்சியாகும். இது அறியப்படுவது

1) கேபிள் தொலைக்காட்சி நுட்பமுறை என்பதாகும்.

2) செய்மதி தொலைக்காட்சி நுட்பமுறை என்பதாகும்.

3) எண்மானத் தொலைக்காட்சி நுட்பமுறை என்பதாகும்.

4) இயந்திர பொறிமுறைத் தொலைக்காட்சி நுட்பமுறை என்பதாகும்.

25. பின்வருவன பிரஜை தொடர்பான கூற்றுக்களாகும்.

A - பிரஜை எனப்படுபவர் சட்டரீதியாக வரையறுக்கப்பட்ட எல்லைக்குள் வசிக்கும் ஒரு நபராவார்.

B - பிரஜை ஒரு குழுவானது அரசை அமைககின்றது.

C - அரசியலில் ஈடுபடுவது பிரஜையின் ஒரு வகிபாகமாகும்.

D - சிறந்த பிரஜைகள் பற்றிய தகவல்களை வெகுசன ஊடகங்கள் அவசியம் முன்வைக்க வேண்டும்

மேற்குறித்தவற்றில் ஆகச்சரியான கூற்றுக்களாவன,

1) A, B மற்றும் C மாத்திரம் ஆகும். 2) A, B மற்றும் D மாத்திரம் ஆகும்.

3) B, C மற்றும் D மாத்திரம் ஆகும். 4) A, B, C, D அனைத்தும் ஆகும்.

26. பின்வரும் அம்சங்களைக் கவனத்திற் கொள்க.

A. வட்டார மொழிகளைப் புரிந்து கொள்ளல்.

B. பாரம்பரிய சடங்குகள் மற்றும் நம்பிக்கைகளைப் புரிந்து கொள்ளல்.

C. குறியீடுகளையும் கலைகளையும் புரிந்து கொள்ளல்.

D. சட்டம் மற்றும் அறநெறிகளைப் புரிந்து கொள்ளல்.

படைப்பாக்கத் தொடர்பாடற் செயன்முறை நெருக்கமாக இருப்பது

1) A, B மற்றும் C உடன் மாத்திரம் ஆகும். 2) A, B மற்றும் C உடன் மாத்திரம் ஆகும்.

3) A, C மற்றும் D உடன் மாத்திரம் ஆகும். 4) B, C மற்றும் D உடன் மாத்திரம் ஆகும்.

27. செய்திப் பத்திரிகையொன்றின் உள்ளடக்க மாதிரியைத் தயாரிக்கும் போது முதலில் இடம் ஒதுக்கப்படுவது

1) செய்திகளுக்கு 2) அரசாங்கத் தகவல்களுக்கு

3) தலைப்புக்களுக்கு 4) விளம்பரங்களுக்கு

28. ஆட்களிடைத் தொடர்பாடலின் சிறப்பு

1) வெகுசனத் தொடர்பாடலுக்காகப் பயன்படுத்துவது 2) ஒருவரினுள்ளான தொடர்பாடல் வகை

3) சிறு குழுவை இணைக்கப் பயன்படுவது 4) பின்னூட்டத்தைத் தவறானது பின்பற்றுவது

29. இலங்கையில் அதிகமான செய்திப் பத்திரிகை அச்சிடப்படும் அளவு

1) புரோட்சீட் (Broad Sheet) 2) டப்லொயிட் (Tabloid)

3) முழுடெமி (Full deme) 4) கொம்பாக்ட் (Compact)

30. நண்பரொருவருடன் பேசிக்கொண்டிருக்கும் நீங்கள் வீதியைக் கடப்பதற்காக பாதசாரிகள் கடவையொன்றின் அருகே காத்திருக்கின்றீர்கள். அப்போது பெரும் ஒலிப்பான் சத்தத்துடன் காரொன்று வேகமாகச் செல்வதைத் திடீரெனக் காண்கிறீர்கள். உங்களது அடுத்த கட்டத்திறகுப் பயன்படுத்தக்கூடிய தொடர்பாடல் ஆனது

1) காட்சிப்புலத் தொடர்பாடல் ஆகும். 2) செவிப்புல தொடர்பாடல் ஆகும்.

3) ஆட்களிடைத் தொடர்பாடல் ஆகும். 4) ஆளுள் அல்லது அகமுகித் தொடர்பாடல் ஆகும்.

31. புலமைப்பரிசில் ஒன்று தொடர்பாக வெளிநாட்டுப் பல்கலைக்கழகமொன்றைச் சமீபத்தில் விசாரித்த திசானாவிற்கு அவளது கல்விச் சான்றிதழ்களைத் தமக்கு விரைவாக அனுப்பி வைக்குமாறு தொலைபேசி அழைப்பொன்று கிடைத்தது. அதனை மேற்கொள்ள அவளுக்கு மிகப் பயன்தரும் தெரிவாக இங்கு அமைவது

1) தொலை அஞ்சல் (Telemail) 2) மின்னஞ்சல்

3) தொலைநகல் 4) பேஜர்

32. ஊடக அறிக்கையிடலில் நம்பகத்தன்மை பெருமளவில் தங்கியிருப்பது

1) துல்லியம், நடுநிலைமை, கவருந்தன்மையில்  2) நடுநிலைத்தன்மை, கவருந்தன்மை, எளிமையில்

3) தெளிவு, துல்லியம், சுருக்கத்தில்  4) துல்லியம், நடுநிலைத்தன்மை, தெளிவில்

33. உலக தொலைக்காட்சித்தினம் கொண்டாடப்படுவது

1) பெப்ரவரி 13 இல்  2) செம்ரெம்பர் 07 இல்  3) நவம்பர் 2 இல்  4) டிம்பர் 10 இல்

34. பின்வருவனவற்றில் வலமிருந்து இடமாக எழுதப்படும் மொழி

1) ஹிந்திமொழி  2) ஜப்பானிய மொழி  3) அரபுமொழி  4) கொரியமொழி

35. செய்திப்பத்திரிகையொன்றில், ஆசிரியர் தலையங்கம்

1) முதற்பக்கத்தில் முக்கிய செய்தியின் மேற்புறமாகக் காணப்படும்.

2) செய்தி ஆசிரியரால் எழுதப்படும்.

3) செய்திப்பத்திரிகையின் விருது வாககியத்தை ஒரு வகையில் தருவதாயிருக்கும்.

4) நிறுவனத்தின் நோக்கினைப் பிரதிநிதித்துவம் செய்யும் ஒரு ஆவணமாகக் காணப்படும்.

36. தொலைக்காட்சி ஊடகத்தில், எழுத்துரு மற்றும் செம்மையாக்கம் அற்றிருப்பது ஒரு அடிப்படை அம்சமாகக் காணப்படுவது

1) விவரண நிகழ்ச்சிகளில்  2) சஞ்சிகை நிகழ்ச்சிகளில்

3) மெய்மை நிகழ்ச்சிகளில்  4) இசை நிகழ்ச்சிகளில்

37. உங்களது வகுப்பறையில் பயன்படுத்தக்கூடிய எறிவை ஊடக உபகரணமொன்றின் சில இயல்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

A. அது சக்தி வாய்ந்த மின்குமிழ் ஒன்றை உள்ளகத்தே கொண்டுள்ளது.

B. வர்ணப் படங்களை அது எறிவை செய்கிறது.

C. அது நேர்நிலை ஊடுகடத்திச் சட்டங்களைப் பயன்படுத்துகின்றது.

மேற்குறித்த அனைத்து இயல்புகளையும் கொண்டுள்ள எறிவை ஊடகம்

1) மேந்தலை எறிவை  2) வழுக்கி எறிவை அல்லது பட எறிவை

3) துரித எறிவை  4) பல்லூடக எறிவை

38. பின்வரும் செயற்பாடுகளுள் வாயிற்காப்பு எண்ணக்கருவுடன் மிக வேறுபட்டிருப்பது

1) ஊடக நிறுவனத்தின் சமூகப் பொறுப்பைப் பூர்த்தி செய்தல்

2) ஊடக நிறுவனத்தின் இலக்குகளை ஈட்டிக் கொள்ளுதல்

3) தற்போதுள்ள சமூகச் சூழலுக்குப் பொருத்தமாயிருத்தல்

4) தகவல் பெறும் உரிமையை வலுப்படுத்துதல்

39. கீழே ஊடகங்களின் சில பண்புகள் தரப்பட்டுள்ளன.

A. துரிதம்

B. செலவு அதிகம்

C. இடைத்தொடர்பு

D. கால இடைவெளி

இந்தப் பண்புகளை பிரதிநிதித்துவம் செய்யும் ஊடக வரிசையாக அமைவது

1) தொலைக்காட்சி, செய்திப் பத்திரிகை, வானொலி, புதிய ஊடகம்

2) வானொலி, தொலைக்காட்சி, புதிய ஊடகம், செய்திப் பத்திரிகை

3) செய்திப் பத்திரிகை, தொலைக்காட்சி, வானொலி, புதிய ஊடகம்

4) வானொலி, தொலைக்காட்சி, செய்திப்பத்திரிகை, புதிய ஊடகம்.

40. டப்லொயிட் (Taploid) செய்திப் பத்திரிகைகளுடன் தொடர்புடைய கூற்றைத் தெரிவு செய்க.

1) அவை அநேகமான தாள்களுடன் கூடிய செய்திப்பத்திரிகைகளாகும்.

2) தேசிய ரீதியிலான முக்கிய தகவல்களை அவை கொண்டிருக்கும்.

3) பரந்த தலைப்புக்களுடனான தகவல்களை அவை கொண்டிருக்கும்.

4) மென்செய்திகளுக்கு அவை அதிக முக்கியத்துவம் அளிக்கும்.

| | | |
|---|---|---|
| **மாகாணக் கல்வித் திணைக்களம்**<br>**வடக்குமாகாணம்**<br>**Provincial Department of Education – Northern Province** | | |
| **இரண்டாம் தவணைப்பரீட்சை 2023** | | |
| **தரம் : 11** | **தொடர்பாடலும் ஊடகக்கல்வியும் II**<br>**Communication and Media Studies II** | **நேரம் : 2 மணித்தியாலம்** |
| **சுட்டெண்:..............................** | I | **மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடம்** |

- ❖ முதலாம் வினாவையும் வேறு எவையேனும் நான்கு வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
- ❖ முதலாம் வினாவுக்கு 20 புள்ளிகளும் ஏனைய எல்லா வினாக்களுக்கும் 10 புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.

01. பாடசாலையின் ஊடகக கழக நிர்வாகத்தினர் ஊடகதின விழா நிகழ்வினைக் கொண்டாடுதல் பற்றிக் கலந்துரையாடல் ஒன்றினை முன்னெடுத்திருந்தனர்.

1) மேற்படி கலந்துரையாடல் நடைபெற்ற தொடர்பாடல் வகை மற்றும் வடிவங்களினைக் குறிப்பிடுக.
2) மேற்படி கலந்துரையாடலில் ஒருவர் பங்குபற்றவில்லை என்பதால் அவருடன் ஊடக கழக தலைவர் திறன்பேசி வாயிலாக தொடர்பு கொண்டிருந்தார். இச்சூழலை அடையாளப்படுத்தும் தொடர்பாடல் வகையை பெயரிடுக.
3) மேற்படி கூட்டத்தினை ஆவணமாக்கும் பொருட்டு பயன்படுத்த வேண்டிய தொடர்பாடல் வடிவம் எது?
4) பேச்சு மொழியை விட எழுத்து மொழியை முறைசார்ந்ததாக உருவாக்கும் இரண்டு அம்சங்களினைப் பெயரிடுக.
5) வினைத்திறன்மிக்க ஆவணங்களின் இரண்டு இயல்புகளினைப் பெயரிடுக.
6) ஊடக தின நிகழ்வு நடைபெறும் போது பயன்படுத்த வேண்டிய ஊடக சாதனங்கள் இரண்டிற்கு குறையாது எழுதுக.
7) ஊடக தின நிகழ்வு பற்றி ஆவணப்படுத்தப்பட்ட தகவலை அனுப்புவதற்குத் திறன்பேசியொன்று பயன்படக் கூடுமான இரண்டு சந்தர்ப்பங்களினைக் கூறுக.
8) ஊடக தின நிகழ்வினைப் பிரசித்தப்படுத்துவதற்கு வெகுசன ஊடகங்களினை பயன்படுத்துவது பற்றித் தீர்மானிக்கப்பட்டது. இதற்கென வெகுசன ஊடகங்கள் பயன்படும் சந்தர்ப்பங்கள் இரண்டு தருக.
9) ஊடக தின விழாவினைப் புகைப்படமெடுத்தல் பற்றியும் தீர்மானிக்கப்பட்டது. புகைப்படமெடுத்தலில் பின்பற்றப்படும் மூன்று படிநிலைகளும் எவை?
10) மேற்படி புகைப்படங்களைப் பயன்படுத்தி செய்திப் பத்திரிகையொன்றுக்கு கட்டுரை வரையப்பட வேண்டுமெனப் பிரேரிக்கப்பட்டது. நிலைத்த புகைப்படங்கள் வழியாக அச்சு ஊடகம்பெறும் இரண்டு ஆதாயங்களினை எடுத்துரைக்குக.

(10 x 2 = 20 புள்ளிகள்)

02. சமூகம் ஒன்றின் உயிர்வாழ்விற்குத் தொடர்பாடல் அடிப்படையானதாகும்.

1) தொடர்பாடலின் அடிப்படைச் செயற்பாடுகள் இரண்டினைக் குறிப்பிடுக.
2) வெகுசனத் தொடர்பாடலின் இயல்பை இரண்டு முக்கிய குறிப்புக்கள் வழியாகச் சுருக்கமாக விபரிக்குக.
3) செய்தியொன்றினை உருவாக்கும் போது செய்திப் பெறுமதியைத் தீர்மானிக்கும் மூன்று காரணிகளை விபரிக்குக..
4) செய்தி அறிக்கை ஒன்றிற்கும் படைப்பாக்க அறிக்கை ஒன்றிற்கும் இடையிலான இரண்டு வேறுபாடுகளைச் சுருக்கமாக விளக்குக.

(1 + 2 + 3 + 4 = 10 புள்ளிகள்)

03. தொலைக்காட்சி ஊடகம் பற்றிய அறிக்கை ஒன்றினைத் தயாரிக்கும் பணி உங்களுக்குத் தரப்பட்டுள்ளது.

1) தொலைக்காட்சி ஊடகப் பெறுநர்கள் பொதுவில் எவ்வாறு அழைக்கப்படுகின்றனர்?
2) ஏனைய வெகுசன ஊடகங்களினை விடத் தொலைக்காட்சி ஊடகம் எவ்வகையில் வேறுபட்டிருக்கிறது என்பதனை இரண்டு அடிப்படைகள் வழியாகச் சுருக்கமாக விவரிக்குக.
3) தொலைக்காட்சி ஊடகத்தில் ஒலிபரப்பாகும் மூன்று நிகழ்ச்சி வகைப்பாடுகளை விவரிக்குக.
4) தொலைக்காட்சி ஊடகம் சமகால உலகில் ஏற்படுத்தும் தாக்கங்களினை நான்கு குறிப்புகள் வழியாக ஆராய்க.

(1 + 2 + 3 + 4 = 10 புள்ளிகள்)

04. அனைத்து தகவல்களும் செய்திகளல்ல. ஆனால் அனைத்து செய்திகளும் தகவல்களாகும்.

1) தகவல் என்றால் என்ன என்பதனைச் சுருக்கமாக அறிமுகப்படுத்தல்.
2) தகவல்களின் அனுகூலங்கள் நான்கினைக் குறிப்பிடுக.
3) தகவல் ஒன்றின் செய்திப் பெறுமதியை நிர்ணயிப்பதற்கு ஒரு ஊடகவியலாளர் கருத்தில் கொள்ள வேண்டிய மூன்று காரணிகளை விளக்குக.
4) செய்திப் பத்திரிகை ஒன்றின் உள்ளடக்கத்திற்கு ஏற்றவகையில் தகவல்களை அளிக்கையிடும் போது ஒரு ஊடகவியலாளர் பயன்படுத்தக்கூடிய தகவல் வடிவங்கள் நான்கினை விரிவாகக் குறிப்பிடுக.

(1 + 2 + 3 + 4 = 10 புள்ளிகள்)

05. புதிய அறிமுகநிலை தொடர்பாடுநர்களை ஆட்சேர்ப்பதற்காக தேசிய கல்வி நிறுவனத்தின் வானொலி ஊடக நிலையமொன்று தனது உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் அறிவித்தல் ஒன்றை வெளியிட்டிருந்தது.

1) வானொலி ஊடகத்தின் வலுவான அம்சங்கள் இரண்டினை எழுதுக.
2) வானொலி ஊடகத்தில் ஒலிபரப்பப்படும் நிகழ்ச்சி வடிவங்கள் இரண்டினைக் குறிப்பிட்டு விபரிக்குக.
3) வானொலி ஊடகத்திற்கு பிரதி (எழுத்துரு) எழுதும் போது கவனிக்க வேண்டிய விடயங்கள் மூன்றினை விபரிகுக.
4) தேசிய கல்வி நிறுவகத்தின் வானொலி சேவைக்கு எத்தியோகபூர்வ இணையத்தளம் ஒன்றினை பேணுவதன் மூலம் அதற்குக் கிடைக்கக்கூடிய நான்கு அனுகூலங்களை விவரிக்குக.

(1 + 2 + 3 + 4 = 10 புள்ளிகள்)

06. 1) எவ்வழிமுறையைப் பயன்படுத்துவதன் மூலம் அலுவலகமொன்றில் அழகான அச்சு இயந்திரத்தினால் அதன் பணி நிறைவேற்றப்பட முடியும்?
2) மேலே (1) இல் குறிப்பிட்ட வழிமுறையின் நன்மைகள் இரண்டினைச் சுருக்கமாக அறிமுகப்படுத்துக.
3) செய்திப் பத்திரிகையொன்றில் பின்வரும் தனிநபர்கள் / பிரிவுகள் கொண்டிருக்கும் வகிபங்குகளைச் சுருக்கமாக விபரிக்குக.
அ) பிரதம ஆசிரியர் ஆ) விளம்பரப் பிரிவு இ) ஆசிரியர் பீடம்
4) இலக்கமுறை (Digital) புகைப்படவியலின் விசேட இயல்புகள் நான்கினை விபரிக்குக.

(1 + 2 + 3 + 4 = 10 புள்ளிகள்)

07. கம்பீர், பாடசாலைகளுக்கிடையிலான நாடகப் போட்டியில் வெற்றி பெற்றபோது அவனது நடிப்பின் ஆற்றலைப் பற்றிய பெருமையை பலரும் கேள்விப்பட்டனர்.

1) ஒரு நடிகர் பார்வையாளர்களினைக் கண்களினூடாக தொடர்ந்து பார்த்தவாறே பேசுவார். இந்த நுட்பம் எவ்வாறு அழைக்கப்படுகின்றது?
2) போட்டியில் கம்பீருக்கு அவசியம் இருந்திருக்கவேண்டிய நான்கு வாய்மொழியற்ற அம்சங்களினை பெயரிடுக.
3) கம்பீரின் வெற்றியை அதிபர் மேடையில் பாராட்டி பரிசளித்தார். இதன்போது நடைபெற்ற தொடர்பாடலின் வகையைக் குறிப்பிட்டு விளக்குக.
4) கம்பீர் தனது வெற்றி தொடர்பில் வானொலி ஊடகம் ஒன்றிற்கு பேட்டியை வழங்கியிருந்தார். அப்பேட்டி ஒலிபரப்பாகிய தொடர்பாடல் வகையைக் குறிப்பிட்டு விளக்குக.

(1 + 2 + 3 + 4 = 10 புள்ளிகள்)